*83*

# கர்த்தருக்காகக் கனிகொடுத்தல்

## யோவா. 15:1-12, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மேல்வீடு, பஸ்கா விருந்து, நெருங்கிக் கொண்டிருந்த சிலுவை, சீஷர்களை ஆயத்தப்படுத்துவதன் அவசியம் - இவை யாவும் யோவான் 14-16ல் உள்ள இயேசுவின் இணையற்ற பிரியாவிடை உரையின் காட்சி யமைவாக இருந்தது. அந்த உரையின்போது, கர்த்தர், திராட்சச் செடி மற்றும் அதின் கிளைகள் என்பதன்மீது அறைகூவல் விடுக்கும் ஒரு செய்தியை எடுத்துரைத்தார்.*

*கிறிஸ்து இந்த உருவகத்தைப் பயன்படுத்தும்படி அவரை ஏவியது எது என்பது பற்றிக் கல்வியாளர்கள் யூகம் செய்துள்ளனர். ஒருவேளை அது, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பயன்படுத்தப்பட்ட திராட்ச ரசமாக இருக்கலாம். ஒருவேளை அந்த வீட்டில் வளர்ந்திருந்த ஒரு திராட்சச் செடியை ஜன்னல் வழியாகக் காணமுடிந்திருக்கலாம். உரையின் கடைசிப் பகுதியை இயேசு பேசுமுன்பு அவர்கள் மேல்வீட்டை விட்டுப் புறப் பட்டிருந்தால் (யோவா. 14:31ஐக் காணவும்), அந்தச் சிறு குழுவினர் ஒரு திராட்சத் தோட்டத்தைக் கண்டிருக்கலாம். அவர்கள், பொன்னால் செய்த திராட்சக் கொடி மற்றும் திராட்சப் பழக்குலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த தேவாலயத்தைக் கடந்து சென்றிருக்கக் கூடும். கிறிஸ்து, பழைய ஏற்பாட்டிலிருந்து, பழக்கமான உருவகம் ஒன்றைப் பயன்படுத்த விரும்பியிருக்கக் கூடும் (சங். 80; ஏசா. 5; எரே. 2). திராட்சச் செடி என்பது எல்லாரும் புரிந்துகொள்ளக்கூடிய உருவகமாக இருந்ததால் இயேசு இந்த உருவகத்தைப் பயன்படுத்தியிருக்கலாம்.*

*இயேசு அந்த உருவகத்தைப் பயன்படுத்தியது ஏன்? என்பதை விட, தமது விவரிப்பில் அவர் நிறைவேற்றும்படி நம்பிக்கையாயிருந்தது எது? என்பதே மிக முக்கியமான கேள்வியாக உள்ளது. விரைவில் அவர் இந்தப் பூமியை விட்டுப் புறப்படுவார். அவரது ஊழியத்தை அவரது சீஷர்கள் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும். இதை அவர்கள் எவ்வாறு செய்யக்கூடும் என்பதை அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாயிருந்தது. அதுவே கர்த்தருடைய வார்த்தைகளுக்குப் பின்னணியாக உள்ளது:*

*நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக் காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திரா விட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப் பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக் கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னு டைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.*

*நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரி லொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனை யாயிருக்கிறது. ... நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன் (யோவா. 15:1-12, 16).*

இவ்வார்த்தைகள் தொடக்கத்தில் அப்போஸ்தலர்களிடம் பேசப் பட்டன, இவைகள் அவர்களுக்கு விசேஷித்த தனிக்குறிப்புகளைக் கொண்டிருந்தன (15:16ஐக் கவனிக்கவும்). இருப்பினும் வசனம் 1 முதல் 12 வரையுள்ள செய்தியின் இருதயம் போன்ற மையப்பகுதியானது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் நடைமுறைப் படுத்தப்படக்கூடும்.

இவ்வசனங்களினூடாக மூன்று மாபெரும் ஆய்வுக்கருத்துகள் உள்ளன: (1) தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல், (2) தேவனுக்கென்று கனிகொடுத்தல் மற்றும், (3) தேவனுடைய அன்பில் நிலைத்திருத்தல். முக்காலியின் மூன்று கால்கள்போல், இந்த ஆய்வுக்கருத்துக்கள் ஒன்றை

யொன்று தாங்குகின்றன. இந்தப் பிரசங்கம், இந்த ஆய்வுக் கருத்துக்களில் இரண்டாவதாக உள்ள - கனிகொடுத்தல் என்ற - கருத்தின்மீதும் கனி கொடுத்தலின் குறிப்பான ஒரு அம்சத்தின்மீதும் கவனம் செலுத்தும்.[1]

## கனிகொடுத்தலின் உண்மை நிலை

இவ்வசனப் பகுதி முழுவதிலும், திராட்சச்செடியிலுள்ள கிளைகள் ஒரு நோக்கம் கொண்டுள்ளது, கனி கொடுத்தல் என்பதே அந்த நோக்கமாக உள்ளது என்பதே அடிப்படையில் அமைந்துள்ள கருத்தாக உள்ளது (வ. 2, 4, 5, 8). திராட்சத் தோட்டக்காரர் ஒருவர், [கனிகொடுத்தல் என்ற] நோக்கத்தை நிறைவேற்றத் தவறுகின்ற ஒரு கொடி இருப்பதை நியாயப் படுத்த இயலாது. கனிதராத கொடிகள், கனிநிறைந்துள்ள கொடிகளி டமிருந்து சத்துக்களை எடுத்துக்கொள்ளுவதால், அவைகள் திராட்சச் செடியிலிருந்து வெட்டப்படுகின்றன (வ. 2, 6). அதுபோலவே, கிறிஸ்தவர் கள் என்ற வகையில் நாம் ஒரு நோக்கம் கொண்டவர்களாக இருக்கின் றோம்: அது கனிதருதல் என்ற நோக்கமாகும். இயேசு, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷரா யிருப்பீர்கள்" என்றார் (வ. 8). கனிகொடுத்தல் என்பது விருப்பத் தேர்வாக இருப்பதில்லை. கனிகொடுத்தல் என்பது கிறிஸ்தவ நடவடிக்கைகளின் பிற்சேர்கையாக இருப்பதில்லை. கனிகொடுத்தல் என்பது நமது நோக்கமாக உள்ளது; இதுவே கிறிஸ்துவைப் பின்பற்றுவது பற்றிய எல்லாமுமாக உள்ளது. நாம் கனிகொடுக்கவில்லையென்றால், நமது இருப்பிற்கான காரணத்தை நாம் இழக்கின்றோம்.

நாம் கொடுக்க வேண்டிய ''கனி'' என்பது எது? ''கனி'' என்ற சொற்றொடரைப் புதிய ஏற்பாடு பல்வேறு வழிகளில் பயன்படுத்துகிறது.[2] யோவான் 15ன் "கனி" என்பது "ஆவியின் கனி" என்பதாகச் சிலர் நம்புகின்ற னர். பவுல், "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" என்று எழுதினார் (கலா. 5:22, 23அ). இத்துடன், நமது வாழ்வில் நாம் கிறிஸ்து வைப்போன்ற பண்புகளை மேம்படுத்தும்போது ''கனிகொடுத்தல்'' என்பதற்கான கட்டளையை நாம் நிறைவேற்றுகின்றோம் என்பதைச் சிலர் வலியுறுத்துகின்றனர். ''கனி'' என்ற சொற்றொடர், கர்த்தருக்கென்று வாழ்தல் மற்றும் ஊழியம் செய்தல் என்பவற்றின் நேர்மறையான விளைவுகள் எல்லாவற்றையும் குறிப்பிடக்கூடும் என்று மற்றவர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர். பவுல், "கிறிஸ்து எனக்கு ஜீவன் ... சரீரத்தில் பிழைத் திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனு[கனியு]ண்டாயிருப்பதால்" என்று கூறினார் (பிலி. 1:21, 22அ). KJVயில் "இது என் பிரயாசத்தின் பலன்[கனி]" என்றுள்ளது.

மறு உற்பத்தி என்பதும் அந்த மறு உற்பத்தியின் விளைவு என்பதும், வேதாகமத்தில், "கனி" என்ற வார்த்தையின் பொதுவான பயன்பாடுகளில் ஒன்றாக உள்ளது (ஆதி. 1:11; லூக். 1:42). ஆப்பிள் மரத்தின் கனி, ஆப்பிள் பழமாக உள்ளது, ஆரஞ்சு மரத்தின் கனி ஆரஞ்சுப் பழமாக உள்ளது, ஒரு

*கிறிஸ்தவரின் "கனி" என்பது இன்னொரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்று யாரோ ஒருவர் குறிப்பிட்டார். உலகப்பிரகாரமான வட்டாரத்தில், மனிதகுலத்திற்கு, ''பலுகிப்பெருகிப் பூமியை நிரப்புங்கள்'' என்று கூறப்பட்டது (ஆதி. 1:28; ஆதி. 9:1, 7ஐயும் காணவும்). இதேபோன்ற ஒரு அறைகூவல் ஆவிக்குரிய உலகிலும் காணப்படுகிறது. பவுல், பின்வருமாறு எழுதினார்:*

> *அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக் கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் (ரோமர் 7:4).*

*ரோமர் 7:4ல் "கனி" என்று சொற்றொடர் ஒரு பொதுவான வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம், ஆனால் திருமண விவரிப்பு, பிள்ளைகள் - ஆவிக்குரிய பிள்ளைகள், அதாவது புதிய கிறிஸ்தவர்கள் - என்ற "கனியை" கருத்தாகத் தெரிவிக்கிறது. பவுல் தாமேகூட, ரோமாபுரி சபையாருக்கு எழுதியபோது இவ்வகையான கனிதருதலைப் பற்றிப் பேசியிருக்கலாம். அவர், "புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை [கனியை] அடைந்தது போல உங்களுக்குள்ளும் சில பலனை [கனியை] அடையும் படிக்கு" (ரோமர் 1:13) அவர்களைச் சந்திக்க விரும்பியதாகக் கூறினார்.*

*யோவான் 15ன் "கனி"யைப் பொறுத்தமட்டில், அதில் குறிப்பிடப் பட்டுள்ள சாத்தியக்கூறுகளுக்கிடையில் நாம் தேர்ந்து கொள்ளுதல் என்பது அவசியமாக உள்ளதா? நாம், நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் ஆவியின் கனியை மேம்படுத்திக் கொள்ளாமலேயே கிறிஸ்துவைப் போன்ற பண்புகளை மேம்படுத்திக்கொள்ள முடியுமா? இழந்துபோகப்பட்டவர் களைச் சென்றடையாமலேயே நாம் கிறிஸ்துவைப் போலிருந்து ஆவியின் கனியினால் நிரப்பப்பட முடியுமா? இயேசு, "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" தாம் வந்ததாகக் கூறினார் (லூக். 19:10), மற்றும் நாம், "அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற" வேண்டியவர்களாக இருக்கின்றோம் (1 பேது. 2:21). ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படிக்கு நாம் நமது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்தறிய வேண்டும்.*

*அந்த நடைமுறைப் பயன்பாட்டைச் சிந்தையில் கொண்டவர்களாக, பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: திராட்சச் செடி கனிதருவதில்லை, அது கொடிகளின் பணியாக உள்ளது. திராட்சச் செடியானது, கொடிகள் தங்களின் பணியைச் செய்யக்கூடியவைகளாக்குகிறது. ஆனால் கொடிகள் தாமே கனிகளை உற்பத்தி செய்ய வேண்டும். கொடிகள் கனிகளைத் தராதிருந்தால், கனிகளே இராது. நீங்களும் நானும், இழந்துபோகப் பட்டவர்களை அடையத் தவறினால், எவரொருவரும் இரட்சிக்கப்பட மாட்டார்கள்.*

*புதிய ஏற்பாட்டில், ஒருவர் தம் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பது, கிறிஸ்தவராக இருப்பதன் இயல்பான விளைவு என்ற வகையில் அது அதிகமாகக் கட்டளையிடப்படவில்லை. நம்மில் பெரும்பாலானவர்*

கள், மத்தேயு சுவிசேஷத்தின்படியாகப் பிரதான கட்டளையை நன்கு அறிந்துள்ளோம்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து" (மத். 28:19). "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், எல்லா இனத்தவரையும் சீஷராக்குங்கள்"[3] என்பது அந்த வசனத்தின் நேரடியான தரவழைப்பாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீங்கள் சென்றுகொண்டிருக்கையில் (அல்லது, நீங்கள் செல்லுகையில்), நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் போதியுங்கள்" என்று இது அர்த்தப்படுகிறது. எருசலேம் சபையானது உபத்திரவத்தினால் சிதறடிக்கப்பட்டபோது, சரியாக இதுதான் நடந்தது.

> ... அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள் ... .
>
> சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:1, 4).

நாம் எதைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம் என்பதை, நாம் புரிந்து கொண்டிருந்தால், பகிர்ந்துகொள்ளுதல் என்பது நமக்கு இயல்பானதாக இருக்க வேண்டும். நாம், இயேசுவின்மீது நமக்குள்ள விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்; நாம் நற்செய்தியாகிய சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம். சமீபத்தில் திருமண நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட இளம் பெண்ணிடம், அவளது திருமண நிச்சயதார்த்த மோதிரத்தைக் காண்பிக்கும்படி கெஞ்சத்தேவையில்லை. அவள் தனது மோதிரத்தை ஒவ்வொருவரிடத்திலும் காண்பித்தல் என்பது அவளுக்கு இயல்பான காரியமாக உள்ளது. புதிதாய்த் தந்தையாகியுள்ள ஒருவர் தனது குழந்தையைப் பற்றிப் பிறரிடத்தில் சொல்லும்படி தூண்டப்பட வேண்டியதில்லை - மற்றும் நீங்கள் நிச்சயமாகவே, ஒரு பாட்டியிடத்தில் அவளது புதிய பேரக்குழந்தையின் புகைப்படத்தைக் காண்பிக்கும்படி அவளைக் கட்டாயப்படுத்தத் தேவையிருக்காது. அந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது அவர்களுக்கு இயல்பான விஷயமாக இருக்கும். துன்பம் நிறைந்துள்ள இவ்வுலகத்தில், உலகமானது நற்செய்திக்காகப் பசியுடன் இருக்கிறது.[4] நாம் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கொண்டுள்ளோம்! அந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது நமக்கு எவ்வளவாக இயல்பான விஷயமாக இருக்க வேண்டும்!

சிலர், "எப்படி? நான் எனது விசுவாசத்தை எப்படிப் பகிர்ந்துகொள்ள முடியும்? மற்றவர்களை இயேசுவுக்காக ஆதாயப்படுத்துதல் என்ற கருத்தில் நான் எப்படிக் கனிகொடுக்க முடியும்?" என்று கேட்கலாம். அது எப்படி என்று இவ்வசனப் பகுதி, நமக்குக் கூறுவதில்லை; பகிர்ந்துகொள்ளுதல் அவசியமானது என்று மட்டுமே இது சுட்டிக்காண்பிக்கிறது. நமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு டஜன் கணக்கில், ஏன் நூற்றுக்கணக்கில் செய்முறைகள் இருக்கின்றன. நாம் ஒவ்வொருவருமே மாறுபட்டவர்களாக இருக்கின்றோம்; ஒருவருக்குப் பணிக்கு உதவுகிற ஒரு செயல் இன்னொரு

வருக்குப் பணிக்கு உதவாமல் போகலாம்.[5] நீங்கள் பயன்படுத்துகின்ற செய்முறை எதுவாக இருப்பினும், அது வாழ்வு மற்றும் போதனை ஆகிய இரண்டையும் உள்ளடக்குவதாக இருக்க வேண்டும். பவுல் இவ்விரண்டு காரணிகளையும் பிலிப்பியர் 2:14-16ல் இணைத்தார்.

> ... கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

(1) *வாழ்வு.* நீங்கள் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும், உண்மை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டும். நேர்மறையாக, நீங்கள் ஒரு நல்ல வாழ்வை வாழ்ந்து, மற்றவர்களை நேசித்து உதவ வேண்டும். எதிர்மறையாக, நீங்கள் சுத்தமாக நிலைத்திருப்பதற்குப் பொல்லாங்கை உங்கள் வாழ்வில் இருந்து வெளியே இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் போதனைக்கு இசைந்த ஒரு வாழ்வை நீங்கள் நடத்தவில்லையென்றால், எவரொருவரும் உங்கள் போதனையைக் கவனிக்க மாட்டார்கள்.[6]

(2) *போதனை.* உங்கள் வாழ்வு எவ்வளவு நல்லதாக இருப்பினும், நீங்கள் சுவிசேஷத்தைப் போதிக்கவும் வேண்டும். சிலர், தாங்கள் சத்தியத்தின்படி வாழ்கின்ற வரையிலும், சத்தியத்தைப் போதிக்கத் தேவையில்லை என்று நினைக்கின்றனர். நீங்கள் இயேசுவைக் காட்டிலும் மேன்மையானவர்களாய் இருக்கின்றீர்களா? அவரே தமது வாழ்வினால் மாத்திரம் கனிதர முடியாதிருந்ததே. அவர் சத்தியத்தை வாழ்ந்தார், ஆனால் அவரும் போதிக்க வேண்டியிருந்ததே. போதனை என்பது கடிதங்களினால், கைப்பிரதிகளினால், துண்டுப்படங்களினால் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினால் அல்லது முகமுகமாய்ச் சந்திப்பதினால் நிறைவேற்றப் படலாம். நீங்கள் எவ்வாறு பிறருக்குப் போதிக்கின்றீர்கள் என்பதல்ல, ஆனால் நீங்கள் அவர்களுக்குப் போதிக்கின்றீர்களா என்பதே முக்கியமான தாக உள்ளது.

பின்வரும் சிந்தனைக்குத் திரும்ப என்னை அனுமதியுங்கள்: யோவான் 15ன்படி, கனிகொடுத்தல் என்பதே கிறிஸ்தவராயிருத்தலின் எல்லாமுமாக உள்ளது. கொடிகள் என்ற வகையில் நமது பணிப்பொறுப்பின் முக்கியத்துவத்தை நாம் நம்பி ஏற்றுக்கொண்டால், கனிகொடுப்பதற்கான வழிமுறையை நாம் கண்டறிந்து செயல்படுத்துவோம்.

## கனிகொடுத்தலின் உறவுமுறை

இயேசு இல்லாமல் நாம் கனிகொடுக்க இயலாது என்பதே கனிகொடுத்தல் பற்றிய கிறிஸ்துவின் போதனையில் பிரதான வலியுறுத்தமாக உள்ளது. வசனம் 4, “என்னில் நிலைத்திருங்கள்” என்ற வார்த்தை

களுடன் தொடங்குகிறது.

திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள ஒட்டுறவு பற்றி நாம் விஞ்ஞானப்பூர்வமாக ஒரு விரிவுரையைக் கொடுக்கக் கூடும். நாம் உணவுப்பரிமாற்றத்தின் செய்கை பற்றிப் பேசக் கூடும்: திராட்சச் செடியின் வேர்கள் மண்ணிலிருந்து ஈரத்தையும் சத்துக் களையும் தனது கொடிகளுக்கு மாற்றுகிறது. நாம் ஒளிச்சேர்க்கை பற்றி கலந்துரையாடக்கூடும்: இலைகளின் பச்சயத்தின் [chlorophyll[7]]மீது சூரிய ஒளியின் செய்கை. இருப்பினும், இது தோட்டக் கலையின்மீதான ஒரு பாடமாக இன்றி உறவுமுறையின் மீதான ஒரு பாடமாக உள்ளது. நீங்கள் உணவுப்பரிமாற்றம் மற்றும் ஒளிச்சேர்க்கை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளாதிருக்கலாம், ஆனால் பின்வருவதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்: கொடியானது செடியுடன் இணைந்திருக்கும்போதுதான் உயிர் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் கொடி எவ்வளவுதான் வளர்ந்திருப் பினும், அது எவ்வளவு நீளமான அல்லது பருமனான கொடியாக இருப் பினும், அது எவ்வளவு பச்சையாக அல்லது ஆரோக்கியமாகத் தோற்றம் தந்திருப்பினும் அல்லது அது எவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருப்பினும், அந்தக் கொடியானது திராட்சச் செடியுடன் இணைந்திராவிட்டால், அது செத்ததாக உள்ளது.

இதே விஷயமானது, கிறிஸ்துவுடனான நமது உறவுமுறைக்கும் உண்மையானதாக உள்ளது: நமது ஆவிக்குரிய வாழ்விற்கு வளர்ச்சிக்கும் அவர் இன்றியமையாதவராக இருக்கின்றார். நாம் அவருக்குள் ஞானஸ் நானம் பெறுகின்றோம் (ரோமர் 6:3-6; கலா. 3:26, 27). நாம் அவருக்குள் ஒரு புது சிருஷ்டியாக இருக்கின்றோம் (2 கொரி. 5:17). ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் அவருக்குள் உள்ளன (எபே. 1:3). நாம் அவருக்குள் மீட்பைக் கொண்டுள்ளோம் (கொலோ. 1:13, 14).

நம்மில் சிலர் நாம் ஆதாயப்படுத்த வேண்டிய அளவுக்கு ஆத்துமாக் களை ஆதாயப்படுத்தாமல் இருப்பது ஏன்? நாம் ஏன் நமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுவதில்லை? நாம் ஏன் ஆவிக்குரிய முறையில் வளருவ தில்லை? என்றும் நாம் ஏன் தேவபக்தியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்வ தில்லை? என்றும் நாம் ஏன் சபைக்கு வருவதில் உண்மைத்தன்மையுடன் இருப்பதில்லை? என்றும் கூடக்கேட்க முடியும். இந்தக் கேள்விகள் யாவற்றிற்கும் பதிலானது ஒரே மாதிரியானதாக உள்ளது: <u>கிறிஸ்துவுடனான நமது உறவு சரியானதாக இருப்பதில்லை.</u> இயேசு, "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என்று கூறினார் (யோவா. 15:5ஆ). அந்த உறவுமுறை சரியானதாக இருந்தால், நாம் கனிகொடுப்போம்.

உறவுமுறை என்பதே திறவுகோலாக உள்ளது. ஒரு தனிப்பட்ட விவரிப்பைப் பயன்படுத்த என்னை அனுமதியுங்கள். எனது சிந்தனை யானது, நான் மிகவும் களைப்புற்றிருந்த, எனது பணி அட்டவணைகள் மிகவும் நிறைந்திருந்த மற்றும் நான் எனது நிதிநிலை சார்ந்த கட்டுப்பாடுகள் பற்றிக் கவலைகொண்டிருந்த ஒரு நாளை நோக்கிப் பின்செல்லுகிறது. எனது மகள்களில் ஒருத்தி என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு

"அப்பா, எனக்கு உதவி தேவை! எனக்கு உண்மையிலேயே உதவி தேவை!" என்று துடிப்புடன் கூறினாள். நான், "எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது" என்று கூறவில்லை. நான், "எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று கூறவில்லை. நான், "என்னிடத்தில் பணம் இல்லை" என்று கூறவில்லை. நான், "உனக்குத் தேவையானதை எப்படித் தருவது என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூடக் கூறவில்லை. எப்படி என்று எனக்குத் தெரியா விட்டால், எப்படி என்று அறிந்த யாரேனும் ஒருவரை நான் கண்டறிவேன். ஏதாவது ஒரு வழியில் நான் எனது மகளுக்கு உதவி செய்வேன். ஏன்? ஏனென்றால் நாங்கள் ஒரு விசேஷித்த உறவுமுறையைக் கொண்டுள்ளோம்.

"இயேசுவுடன் நாம் எவ்வகையான உறவுமுறையைக் கொண்டுள் ளோம்?" என்பதே இந்த வேளையின் கேள்வியாக உள்ளது. அதாவது, நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளோமா?; ஆம் என்றால், இப்போது நாம் அவருக்காக வாழ்கின்றோமா? யோவான் தமது முதல் நிருபத்தில், இயேசுவுக்குள் நிலைத்திருத்தலை தனிப்பட்ட, சொந்தமான அடிப்படையாக வைத்தார். அவருக்குள் நிலைத்திருக்கின்றவர் அவர் நடந்தது போலவே தாமும் நடப்பார் (1 யோவா. 2:6), தமது சகோதரரை அன்புகூருவார் (2:9, 10), மற்றும் பாவம் நிறைந்த வாழ்வுப் பாணியைத் தொடராதிருப்பார் (3:6) என்று அவர் கூறினார். நாம் இயேசுவுடன் ஒரு சரியான உறவு முறையைக் கொண்டிருந்தால், கனிகொடுப்பதற்கான ஒரு வழிமுறையை நாம் கண்டறிவோம்.

யோவான் 15:1-12 வசனங்கள், கனிகொடுப்பவராயிருக்கத் தவறுதலின் விளைவுகள் பற்றித் தீவிரமான சில கூற்றுக்களை எடுத்துரைக்கிறது. வசனம் 2ல் இயேசு, "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்" என்று கூறினார். வசனம் 6, "அக்கினியில் போடுகிறதை" பற்றிப் பேசுகிறது. இருப்பினும் இவ்வசனப் பகுதியானது, நாம் ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக இல்லாத காரணத்தினால் அல்லது பிறவழிகளில் கனிகொடாதிருக்கும் காரணத்தினால் நாம் நரகத்திற்குச் செல்வோம் என்று கூறுவதில்லை. மாறாக, இது நாம் இயேசுவுடன் ஒரு சரியான உறவுமுறையைக் கொண்டிராததால் நாம் இழந்துபோகப் படுவோம் என்றே போதிக்கிறது. வசனம் 6ஐ மீண்டுமாகக் கண்ணோக்குங் கள்: "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்ட வைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம்."

தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளாத சிலர் ஒரு காரணத்தைக் கண்ணோக்குகின்றனர்: அவர்கள், "நான் வெட்கப்படுகின்றேன்" அல்லது "மக்கள் ஆர்வமாயிருப்பதில்லை" அல்லது "நான் ஒரு நல்ல போதகனல்ல" அல்லது "எனக்குப் போதிய அளவு தெரியாது" அல்லது "எனக்கு நேர மில்லை" என்று கூறுகின்றனர். அவர்கள் உறவுமுறையைத் தேடவேண்டிய வேளையில் ஒரு காரணத்தைத் தேடுகின்றனர். பவுல், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று எழுதினார் (பிலி. 4:13).

## கனிகொடுத்தலுக்குத் தேவையானவைகள்

கனிகொடுத்தலின் இருதயம் போன்ற மையப்பகுதியை, உண்மையான திராட்சச் செடியுடன் நமது உறவுமுறையை நிலைநாட்டியுள்ள நிலையில் நாம், இப்போது கனிகொடுத்தலுக்கு நடைமுறையில் தேவையானவைகள் சிலவற்றைக் கண்டறிவதற்காக வேத வசனப்பகுதியைக் கண்ணோக்கு வோம். சுவிசேஷத்துவக் கனிகொடுத்தல் - அதாவது பிறருடன் சுவிசேஷத் தைப் பகிர்ந்து கொள்ளுதல் - என்பதற்கு சொல்வன்மையுள்ள நாவு, ஒரு நல்ல விற்பனையாளராக உள்ள திறமை[8] அல்லது குறிப்பிடத்தக்க அளவு ஞானம் ஆகியவை தேவை என்று சிலர் நினைக்கின்றனர். இவ்வேத வசனப் பகுதியானது இவைகளைப் பற்றி ஏதொன்றும் கூறுவதில்லை. மாறாக இது, நான்கு முன் தேவைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

*(1) கீழ்ப்படிதலுள்ள ஒரு ஆவி.* தேவன் திராட்சத்தோட்டக்காரராக இருக்கின்றார் (யோவா. 15:1) - அவர் திராட்சத் தோட்டத்தை உரிமை கொண்டுள்ளார். அவர் கனிகொடுக்கின்ற கொடிகளையும் சுத்தம் செய்கின்றார் (வ. 2). நாம் யாவருமே கழிக்கப்பட வேண்டிய சில மோசமான குணங்களைக் கொண்டுள்ளோம்! நான் எப்போதுமே அவருக்கும் இயேசுவுக்கும் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும். கிறிஸ்து, ''நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்'' என்று கூறினார் (வ. 10).

*(2) பெருமுயற்சியுள்ள ஒரு சிந்தை.* இயேசு தமது சீஷர்களிடத்தில், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்'' என்று கூறினார் (வ. 3). "சுத்தம்'' என்ற கிரேக்க வார்த்தை "சுத்தம் பண்ணுகிறார்'' என்பதில் உள்ள அதே கிரேக்க வார்த்தை யில் இருந்தே வருகிறது (வ. 2). அவருடைய வசனமே தேவனுடைய "சுத்தமாக்கும் கருவிகளில்'' ஒன்றாக இருக்கிறது. பதினொருவரிடத்தில் கிறிஸ்து, ''... என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்'' என்று கூறினார் (வ. 7).

கனிகொடுத்தலுக்கு, தேவனுடைய வசனத்தைப் பற்றிய - விசேஷமாக சுவிசேஷத்துவக் கனிகொடுத்தல் பற்றிய - அறிவு இன்றியமையாததாக உள்ளது. வேதாகமப் படிப்பும் ஆத்தும ஆதாயமும் ஒன்றிணைந்து செல்லுகின்றன. நான் உண்மையிலேயே வசனத்தை அறிந்திருந்தால், நான் அதைப் பகிர்ந்து கொள்ள விரும்புவேன்; நான் அதைப் பகிர்ந்து கொண்டால், அதை இன்னும் அதிகமாய்க் கற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணருவேன். இயேசு, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்'' என்று கூறினார் (மத். 5:6). கடின வேலையைப் போல் வேறு எதுவும் உணவிற்குச் சுவையூட்டு வதில்லை, கர்த்தருக்காக வேலை மும்முரமாயிருத்தல் - விசேஷமாக, சத்தியத்தைப் பகிர்ந்துகொள்ளும் விஷயங்களில் வேலை மும்முரமா

யிருத்தல் என்பதைப் போன்று தேவனுடைய வசனத்தின் "சுவையை" மேம்படுத்துவது வேறு எதுவும் இல்லை.

*(3) ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு இருதயம்.* நாம் இயேசுவுடன் நிலைத்திருக்க நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும். யோவான் 15ல் அவரது செய்தி "என்னில் *நிலைத்திருங்கள்*" என்பதாகவே உள்ளது (வ. 4). வசனம் 7ல் அவர், "நீங்கள் என்னில் *நிலைத்திருந்தால்*" நீங்கள் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள் என்று கூறினார். கர்த்தருடன் நமது உறவுமுறையானது பல வகைகளில், திராட்சச் செடியுடன் கொடிகளுக் குள்ள உறவுமுறை போன்றதாக உள்ளது என்று நாம் கவனித்துள்ளோம். இருப்பினும், ஒரு வகையில் ஒப்பீட்டின் அம்சம் முறிபடுகிறது: கொடிகள் செடியுடன் இணைந்திருக்கலாமா இல்லையா என்பதற்குத் தெரிவு ஒன்றையும் கொண்டிருப்பதில்லை - ஆனால் நாம் அந்தத் தெரிவைக் கொண்டுள்ளோம்.

வேதாகமம் விசுவாசியின் பாதுகாப்புள்ள நிலைபற்றிப் போதிக்கிறது, ஆனால் விசுவாச விலக்கத்தின் சாத்தியமற்ற தன்மைப் பற்றிப் போதிப்ப தில்லை. யோவான் 15, நான் திராட்சச் செடியுடன் இணைந்த பின்னும்கூட, நீக்கப்படவும் "அக்கினியில் போடப்படவும்" கூடும் என்று போதிக்கிறது. நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நான் கர்த்தருக்குள் *நிலைத்திருக்க வேண்டும்.* நியாயத்தீர்ப்பின் நாளில் நான் எனது ஞானஸ் நானச் சான்றிதழை[9] எடுத்துக்கொண்டு, "பாருங்கள், நான் இன்ன நாளில் ஞானஸ்நானம் பெற்றேன். என்னை நீங்கள் உள்ளே அனுமதிக்க வேண்டும்" என்று கூறமுடியாது. ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்கு இன்றியமையாததாக உள்ளது, ஆனால் கர்த்தருக்குள் நிலைத்திருத்தல் என்பதும் இன்றியமையாததாக உள்ளது (வெளி. 2:10). "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பெற்றிருத்தல் (ரோமர் 6:3, 4; கலா. 3:26, 27) மட்டுமின்றி, "கிறிஸ்துவுக்குள்" *நிலைத்திருத்தல்* (ரோமர் 3:24; 6:11, 23; 8:1, 39; 2 கொரி. 2:14; பிலி. 4:7, 19; 1 தெச. 4:16) என்பதும் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

*(4) தீர்மானமுள்ள ஒரு எண்ணப்போக்கு.* வளருதல் என்பதே கொடி களின் இயல்பாக உள்ளது. அவைகள் வளருவதை விட்டொழிக்கும்போது அவைகள் இறந்துவிடுகின்றன. யாரோ ஒருவர், "மரத்தின் நுனியில் புதுத்தளிர்கள் இல்லையென்றால், அதன் வேரை மரணம் தாக்கியுள்ளது" என்று எழுதினார். நீங்களும் நானும், தேவனுடைய உதவியுடன் கிறிஸ்தவர் களாக வளருவோம் என்று தீர்மானித்துக் கொள்ளுதல் அவசியமாக உள்ளது. விசேஷமாக, கனிகொடுக்கும் விஷயத்தில் நம் வளருதல் அவசிய மாக உள்ளது. யோவான் 15 "கனி"யைப் பற்றிப் பேசுகிறது (வ. 2), ஆனால் அது "*மிகுந்த* கனிகளை"ப் பற்றியும் (வ. 5, 8) "*அதிக* கனிகளை"ப் பற்றியும் (வ. 2) கூடப்பேசுகிறது.

## கனிகொடுத்தலின் விளைவுகள்

இந்தப் பிரசங்கத்தை முடிக்கும் வேளையில், கனிகொடுத்தலின் நேர்மறையான விளைவுகள் சிலவற்றைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.[10]

*நாம் ஆவிக்குரிய வகையில் வளருவோம். நாம் சுத்தப்படுத்தப்பட்டவர் களாய் இருப்போம்; நாம் "மிகுந்த கனிகளை" (வ. 5, 8) மற்றும் "அதிக கனிகளை"க் கொடுப்போம் (வ. 2).* இந்தப் பிரசங்கம் சுவிசேஷத்துவக் கனிகொடுப்பதன்மீது கவனம் குவித்துள்ளது. ஆவிக்குரிய வளர்ச்சியைக் காட்டிலும் ஆத்தும ஆதாயத்துடன் நெருக்கமாக உறவுபட்டுள்ள கிறிஸ்தவ நடவடிக்கை எதையும் நான் அறிவதில்லை.

*நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கப்படும் (வ. 7).* உங்கள் ஜெபவாழ்வு இருக்க வேண்டிய முறைப்படி இல்லையென்றால், இயேசு வுடனான உங்கள் உறவைப் பரிசீலனை செய்து, நீங்கள் கனிகொடுக் கின்றீர்களா இல்லையா என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

*தேவன் மகிமைப்படுத்தப்படுவார் (வ. 8).* திராட்சத் தோட்டம் அவருடையது என்பதையும் அவரே திராட்சத் தோட்டக்காரராக இருக்கின்றார் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கொடிகள் கனிகொடுக்கின்றபோது, அவர் மகிமைப்படுத்தப்படுகின்றார்.

*நாம் நம்மை இயேசுவின் உண்மையான சீஷர்களாகக் காண்பிப்போம் (வ. 8).*

*நாம் சந்தோஷம் கொண்டிருப்போம் (வ. 11).* பவுல், தாம் மனம் மாற்றியவர்களைத் தமது "சந்தோஷமும் கிரீடமுமானவர்கள்" என்று அழைத்தார் (பிலி. 4:1). யோவான், தமது "பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம்" தமக்கு இல்லை என்று கூறினார் (3 யோவா. 4).

*ஆத்துமாக்கள் - நம்முடைய மற்றும் பிறருடைய ஆத்துமாக்கள் - இரட்சிக்கப்படும்!*

## முடிவுரை

நான் ஒரு செயல்துடிப்புள்ள சபையில் அங்கம் வகிக்க விரும்புகின் றேன். மகிழ்வுடனும் வேலை மும்முரத்துடனும் இருக்கும் கிறிஸ்தவர் களுடன் இருத்தல் என்பது எவ்வளவு மெய்சிலிர்ப்புள்ளதாக இருக்கிறது! இருந்தபோதிலும், கர்த்தருடைய சபையாய் இருக்கவேண்டிய வகை பற்றிய கண்ணோக்கை மறந்துபோகும் அளவுக்கு, "திட்டங்களின்" திரளான எண்ணிக்கையில் நாம் அதிகமாய் ஈடுபட்டு விடுவதைக் குறித்து நான் பயம் கொண்டுள்ளேன். சிலவேளைகளில் நாம் தேவனுக்கென்று கனி கொடுக்கவே இருக்கின்றோம் என்ற நமது இருப்பிற்கான உண்மையான காரணத்தின்மீதான நமது கண்ணோக்கை இழந்து விடுகின்றோம். கனிகொடுத்தலுக்குப் பதிலுக்கு ஈடாக எதுவும் இருப்பதில்லை. நாம் யாவரும் தேவனுக்கென்று கனிகொடுப்பவர்களாய் இருக்க அவரே நமக்கு உதவுவாராக![11]

*குறிப்புகள்*

[1]*ஆத்தும ஆதாயம் என்பதே இந்தப் பிரசங்கத்தின் வலியுறுத்தமாக இருக்கும், ஆனால் இந்த எடுத்துரைப்பை ஆவிக்குரிய கனிகொடுத்தல் அல்லது கிறிஸ்துவைப் போல வாழ்தலின் அவசியம் என்பவற்றிற்கேற்பத் தழுவிக் கொள்ள முடியும்.* [2]*"கனி" என்ற வார்த்தை பல பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. இதை, நீங்கள் இன்னொரு நபருடைய வாழ்வில் காண்பவற்றை (மத். 3:10; 7:16-20); உண்மைத் தன்மையின் விளைவை, பலன்தரும் கிறிஸ்தவ வாழ்வை (எபே. 5:9; பிலி. 1:11; கொலோ. 1:10; எபி. 12:11; யாக். 3:17, 18) அல்லது விடுவிக்கப்பட்ட முயற்சிக்கான விளைவு அல்லது பலன் என்பதை (யோவா. 4:36; 12:24)க் குறிப்பிடப் பயன்படுத்த முடியும். "முதல் கனிகள் [பலன்கள்]" (ரோமர் 8:23; 1 கொரி. 15:20, 23; 16:15) என்பது, கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவைகளாயிருந்த (விளைவின் முதல்) பலன்கள் பற்றிய பழைய ஏற்பாட்டு குறிப்பின் அடிப்படையில் அமைந்த பேச்சு உருவகமாக உள்ளது.* [3]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament,* 2d ed. (London: Samuel Bagster and Sons, 1958), 136. [4]*நீங்கள் பேசுகின்ற வேளையில் தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களில் ஆதிக்கம் செலுத்தும் "மோசமான" செய்திகளைப் பற்றிக் குறிப்பிடலாம்.* [5]*இந்தப் பத்தியை நீங்கள் பிரசங்கிக்கும் இடத்தில் செய்யப்படுபவற்றிற்கு ஏற்றாற்போல் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். ஒரு குறிப்பிட்ட முறையை நீங்கள் விரும்பித் தேர்ந்துகொண்டால், அதைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறுங்கள். சுவிசேஷ அறிவிப்பின் ஒரு சில முறைமைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி நீங்கள் ஒரு வகுப்பு நடத்தவிருப்பதாகக் கூட அறிவிக்கலாம்.* [6]*இவ்விடத்தில் நான் ஒரு தனிப்பட்ட விவரிப்பைக் கூடுதலாகக் கூறுவதுண்டு: நான் எனது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு, "முடிவளருதலை உத்தரவாதப்படுத்தும் ஒரு மருந்தை விற்பதில் நான் மிகவும் சிரமப்படுவேன்."* [7]*"பச்சயம்" என்பது "பச்சை" என்று அர்த்தப்படுகிற ஒரு கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. இது இலைகளில் உள்ள பச்சை நிறத்தைக் குறிப்பிடுகிறது.* [8]*அமெரிக்காவில் நான்,* "Some of us couldn't sell a seat on the fifty-yard line at the Super Bowl for fifty cents!" *என்று கூடுதலாகக் கூறுவதுண்டு.* [9]*எனது சொந்த ஞானஸ்நானத்திற்கு நான் இவ்விதமான பதிவேடு எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் நான் ஊழியம் செய்துள்ள சபைகளில், முழுக்காட்டப்படும் ஒவ்வொருவருக்கும் ஞானஸ்நானச் சான்றிதழ் கொடுப்பதை நடைமுறையாக ஏற்படுத்தியுள்ளோம். நீங்கள் வாழும் பகுதியில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை என்றால், இவ்வாக்கியத்தை அதற்கேற்பத் தழுவி யமைத்துக் கொள்ளவும்.* [10]*குறிப்பிட்ட வசனப்பகுதிகள் வாசிக்கப்பட்டு, அந்தப் பிரிவுகள் வேறு வகையில் விரித்துரைக்கப்படக்கூடும்.*

[11]*நீங்கள் அழைப்பை விடுக்கும்போது, மனம் வருந்தும் விசுவாசி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதலின் அவசியத்தை - மற்றும் அதன்பின்பு கிறிஸ்துவுக்குள் நிலைத்திருத்தலை - வலியுறுத்த விரும்புவீர்கள். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிராத எவரொருவரையும் அல்லது கர்த்தரினின்று விழுந்துபோயுள்ள எவரொருவரையும் பதில்செயல் செய்யும்படி ஊக்கப்படுத்துங்கள்.*